**செப்டம்பர் – 21**


# TNPSC துளிகள்

- ஒரு உயர்ந்த நோக்குடைய, நிலையான மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கான, இந்தியாவின் நோக்கங்களும் ஒருங்கமைந்த இந்தியாவின் ஐந்து ஆண்டுகால கூட்டுப் பங்காண்மை வரைவுக்கு உலக வங்கி மன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.
    - இந்த செயல்திட்டமானது 25 முதல் 30 பில்லியன் அமெரிக்க டாலர் நிதியுதவியை இந்தியாவிற்கு கொண்டு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- நியூயார்க்கில் உள்ள ஐ.நா. சபை உலக தலைமையக கட்டிடத்தின் மேற்கூரையில் சூரிய ஒளித் தகடுகளை நிறுவுவதற்காக இந்தியா ஒரு மில்லியன் அமெரிக்க டாலர்களை வழங்கியுள்ளது.
- நைஜரின் நியாமேயில் இந்திய அரசாங்கத்தின் மானிய உதவியுடன் மகாத்மா காந்தி சர்வதேச மாநாட்டு மையத்தை (MGICC - Mahatma Gandhi International Convention Centre) செயல்படுத்த இந்தியா மற்றும் நைஜர் ஆகிய நாடுகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- மத்திய சுகாதார அமைச்சகமானது வெளிப்படைத்தன்மையை உறுதி செய்யும் ஒரு முயற்சியில் நிதி நிலை அறிக்கை, செலவு மற்றும் கட்டண தொகை செலுத்துதல் போன்றவற்றை உள்ளடக்கிய ‘பட்ஜெட் டேஷ்போர்டு’ என்ற உட்புற உபயோக வலைதளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

# தேசியச் செய்திகள்

## லோகோ, வலைதளம் துவக்கம் - மகாத்மா காந்தியின் 150 வது பிறந்த நாள்

- தேசத் தந்தை மகாத்மா காந்தியின் 150வது பிறந்தநாளின் நினைவாக லோகோ மற்றும் வலைதளத்தை குடியரசு தலைவர் தொடங்கி வைத்தார்.



- இந்த லோகோவானது 'கூட்டுசேகர' முறையில் பெறப்பட்டது மற்றும் அனைத்து அரசு அலுவலகம் மற்றும் நிறுவனங்களில் இது காட்சிப்படுத்தப்படும்.
- இதன் இணையதள முகவரி http://gandhi.gov.in ஆகும்.
- இது காந்திய அறிவின் களஞ்சியமான 'காந்திபீடியா' என்ற பங்கேற்பு தன்மையையும் தனிப்பட்ட அம்சங்களையும் உடையது.
- மகாத்மா காந்தியின் 150 வது பிறந்த நாளானது 2 அக்டோபர், 2018 முதல் 2 அக்டோபர் 2020 வரை 2 ஆண்டுகால விழாவாக நாடு முழுவதும் கொண்டாடப்படும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## போர்த்தந்திர ஏவுகணை 'பிரஹார்' பறப்பு சோதனை வெற்றி

- உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட தரையிலிருந்து தரையிலக்கை தாக்கும் போர்த்தந்திர ஏவுகணையான 'பிரஹார்' என்ற ஏவுகணையை DRDO ஒடிஷாவின் பாலசோரில் வெற்றிகரமாக பரிசோதனை செய்தது.



- இது திட எரிபொருளால் இயங்கக்கூடிய தரையிலிருந்து தரையிலக்கைத் தாக்கும் குறுகிய தூர போர்த் தந்திர ஏவுகணையாகும்.
- ஆறு ஏவுகணைகளை ஒரே நேரத்தில் கொண்டிருக்கக் கூடிய சாலை வழியே எடுத்து செல்லக்கூடிய அமைப்பிலிருந்து இதை ஏவ முடியும். மேலும் இதனை ஒரே நேரத்தில் செலுத்து தளத்திலிருந்து எல்லாத் திசைகளிலும் ஏவ முடியும்.
- இது அமெரிக்காவின் MGM-140 இராணுவ போர்த் தந்திர ஏவுகணை அமைப்புடன் ஒப்பிடக்கூடியது ஆகும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## ஆரோக்கியமான மறுபயன்பாட்டிற்காக நகர்ப்புற உள்ளூர் கழிவுநீர் செயல்முறை

- சுகாதாரமான மறுபயன்பாட்டிற்காக நகர்ப்புற கழிவுநீர் ஓடைகளை உள்ளூரிலேயே சுத்திகரிக்கும் புதிய திட்டத்தை (LOTUSHR - Local Treatment of Urban Sewage Streams for Healthy Reuse) புது டெல்லியின் சன் டயல் பூங்காவில் மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சர் துவக்கி வைத்தார்.
- இது இந்திய மற்றும் டச்சு விஞ்ஞானிகளின் கூட்டு முயற்சியாகும். இது கழிவுநீரை தூய்மையான நீராக மாற்றும் செயல்பாடுகளில் இருந்து உயிரி எரிபொருளை உருவாக்குவதற்கான முயற்சியாகும்.

## சுகாதார அமைச்சகமானது டெல் மற்றும் டாடா அறக்கட்டளையுடன் கூட்டிணைவு

- தொற்றா நோய்கள் மீது தேசிய அளவிலான தடுப்பு, கட்டுப்பாடு, பாதிப்பு குறித்த ஆய்வு மற்றும் (NCDs - Non-Communicable Diseases) மேலாண்மை திட்டம் ஆகியவற்றிற்கான ஒரு தொழில்நுட்ப தளத்தை வழங்குவதற்காக மத்திய சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகமானது டாடா அறக்கட்டளை மற்றும் டெல் ஆகியவற்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளது.
- சுகாதார அமைச்சகமானது டெல் நிறுவனத்தை தொழில்நுட்ப பங்காளராகவும் டாடா அறக்கட்டளையை பணியில் ஈடுபடுத்தும் பங்காளராகவும் பயன்படுத்துகிறது.
- இது ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ் விரிவான முதன்மை NCD திட்டத்தில் சுகாதார தொழில் நுட்ப மாற்றத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## சளி மாதிரியை அஞ்சல்துறை வழியாக அனுப்பும் வசதி

- சுகாதார மற்றம் குடும்ப நலத்துறை அமைச்சகமானது (MOHFW - Union Ministry of Health and Family Welfare) காசநோய் (TB) நோய் கண்டறிதலுக்கான சளி மாதிரியை போக்குவரத்து மூலம் கொண்டு வருவதற்கான முன்னோட்டத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்த போக்குவரத்து புது டெல்லியின் காரவால் நகரின் அஞ்சல் துறையின் சேவையை பயன்படுத்துவதன் மூலம் செய்யப்படுகிறது.
- இது TB நோயாளிகளின் பொருத்தமான மேலாண்மைக்கும் நோய் பரவுதலை குறைப்பதற்கும் உதவும்.
- மேலும் சுகாதார அமைச்சகமானது 'நிக்சய் பதிப்பு 2.0' என்ற பயனர் இடைமுகம் மற்றும் தரவு கட்டமைப்புகளுடன் கூடிய இணையதள அடிப்படையிலான செயலியைத் தொடங்கியுள்ளது.

- நிக்சய் ஆனது திருத்தப்பட்ட தேசிய காசநோய் திட்டத்தின் கீழ் (RNTP - Revised National Tuberculosis Programme) TB நோயாளிகளை திறம்பட கண்காணிப்பதற்கான வலை அடிப்படையிலான ஒரு தீர்வாகும்.
- இது MOHFW யின் மத்திய TB பிரிவுடன் (CTB - Central TB Division) இணைந்து தேசிய தகவல் மையத்தால் உருவாக்கப்பட்டு மத்திய சுகாதார அமைச்சகத்தால் தொடங்கப்பட்டது.

# மாநிலச் செய்திகள்

## முதல்முறையாக தொலைபேசி அழைப்பு வாயிலான முதல் தகவல் அறிக்கை

- நாட்டில் உத்தரப் பிரதேச காவல்துறை முதலாவது முறையாக தொலைபேசி அழைப்பு வாயிலாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும் முறையை அறிமுகப்படுத்த இருக்கின்றது.
- இத்திட்டத்தில் ஒரு சாதாரண பொது மனிதன் காவல் நிலையத்திற்கு செல்லாமல் வழக்கமான குற்றங்களை உத்தரப்பிரதேச காவல்துறை தொலைபேசி எண்ணான 100 என்ற எண்ணுக்கு அழைத்து தொலைபேசி அழைப்பு வடிவத்திலான முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்ய முடியும்.
- குற்றங்களை தடுப்பதற்காக, மாநிலம் முழுவதும் உள்ள சுமார் 1 லட்சம் சிறிய மற்றும் பெரிய குற்றவாளிகளின் தகவல்கள் அடங்கிய நேரடி இணையதள தொகுப்பு ஒன்றும் தயாரிக்கப்பட்டுள்ளது.
- பஞ்சாப்பிற்கு பிறகு உத்தரப் பிரதேசம் மட்டுமே இத்தகைய உள்ளூர் குற்றவாளகிளின் நேரடி தகவல் தொகுப்பை தயாரித்த இரண்டாவது மாநிலமாகும்.

## முதலாவது பாலின சமத்துவ விடுதி

- மும்பையின் தியோனாரில் உள்ள டாடா சமூக அறிவியல் நிறுவனத்தின் வளாகம் இந்தியாவில் முதல்முறையாக பாலின சமத்துவ விடுதியைக் கொண்டதாக உள்ளது.
- உச்சநீதிமன்றம் இந்திய தண்டனைச் சட்டத்தின் 377வது பிரிவை (ஓரினச் சேர்க்கையை குற்றமாக்கும் பிரிவு) நீக்கிய பிறகு, இந்தியா பாலின சமத்துவ வசதியுடைய விடுதியைக் கொண்ட முதலாவது நாடாக உருவெடுத்துள்ளது.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## தேசிய விளையாட்டு விருதுகள் 2018

- மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகத்தால் 2018ம் ஆண்டிற்கான தேசிய விளையாட்டு விருதுகள் அறிவிக்கப்பட்டன.



- இந்தியாவின் உயரிய விளையாட்டு விருதான ராஜீவ்காந்தி கேல் ரத்னா விருதிற்கு கிரிக்கெட் அணித்தலைவர் விராட் கோலியும், பளுத்தூக்குதலில் உலக சாம்பியனான மீராபாய் சானுவும் இணைந்து இந்த வருடம் விருது அளிக்கப்பட உள்ளனர்.
- அமிர்தசரஸின் குருநானக் தேவ் பல்கலைக்கழகம் 2017-18ம் ஆண்டிற்கான மவுலானா அபுல் கலாம் ஆசாத் கோப்பைக்கு விருது பெறுபவராக தேர்வு செய்யப்பட்டுள்ளது.

# முக்கிய தினங்கள்

## சர்வதேச அமைதி தினம் - செப்டம்பர் 21

- உலகம் முழுவதும் செப்டம்பர் 21-ம் தேதி, ஒவ்வொரு வருடமும் சர்வதேச அமைதி தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- 2018-ம் வருடத்திற்கான இத்தினத்தின் கருத்துரு 'அமைதிக்கான உரிமை - சர்வதேச மனித உரிமைகள் தீர்மானம் – 70வது வருடத்தில்"




- இந்த கருத்துரு சர்வதேச மனித உரிமைகள் தீர்மானத்தின் 70வது ஆண்டு விழாவை அனுசரிக்கின்றது.
- இத்தினம் முதன்முதலில் 1982 ஆம் ஆண்டு அனுசரிக்கப்பட்டது.
- 1981ம் வருடம் இத்தினத்தை ஐ.நா. பொது அவை ஏற்படுத்தி, அனைத்து நாடுகளுக்கும் மக்களுக்கும் இடையே அமைதியின் கொள்கைகளை பலப்படுத்துவதற்காக நியமிக்கப்பட்ட தினம் இது என்று அறிவித்தது.

- - - - - - - - - - - - - - -